2019 பிப்ரவரி 14]

பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தேவைகள் அதிகம் இல்லாத வழித்தடங்களிலும்கூட, பேருந்துகள் இயக்கப்படும்; ஆனால், நடைகள் குறைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 12 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகளும் முழுவதுமாக நிறுத்தப்படவில்லை. பொது மக்களுடைய தேவையும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்; போக்குவரத்துக் கழகங்களுடைய நஷ்டத்தையும் குறைக்க வேண்டுமென்கிற நோக்கத்தில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, வழித்தட சீரமைப்புகள் செய்யப்பட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) செம்மொழி தமிழாய்வு நிறுவனம், தொடர்ந்து திறம்பட இயங்க நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 12-10-2004 அன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், அன்னைத் தமிழ் மொழிக்கு, நம்முடைய தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு, செம்மொழி என்கிற கிரீடம் சூட்டப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கோரிக்கையினையேற்று, 19-5-2008 அன்று செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் துவங்கப்பட்டது. அப்போது, தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த தலைவர் கலைஞர் அவர்கள், அந்த நிறுவனத்திற்குத் தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து 1 கோடி ரூபாயை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2019 பிப்ரவரி 14*

அப்படி வழங்கப்பட்ட நிதியின் மூலமாக. தமிழக வரலாற்று பயன்மிக்க கல்வெட்டுகளை ஆய்வு செய்வோருக்கு 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது' வழங்குவதற்கு அன்றைக்கு வழிவகை உருவாக்கப்பட்டது. செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில், தமிழ் மொழி ஆராய்ச்சிக்காக, 'தொல்காப்பியர் விருது', 'குறள்பீட விருது', 'இளம் அறிஞர்கள் விருது' ஆகிய விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது, 6-5-2011 அன்று செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் தமிழ் அறிஞர்களுக்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் முதன்முதலில் விருதுகள் வழங்கப்பட்டன. செம்மொழி தமிழ், குடியரசுத் தலைவர் மாளிகையில் சிம்மாசனம் போட்டு அமர்ந்த மகிழ்ச்சியான காட்சியை அன்றைக்கு நாம் கண்டோம். ஆனால், இப்போது மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய பா.ஜ.க. அரசு, மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வழங்கப்படும் நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய செயல்பாடுகளும் முழுமையாக முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனத்திற்கு இன்று வரை முழுநேர இயக்குநர்கூட நியமிக்கப்படாத ஓர் அநீதி நடந்துகொண்டிருக்கிறது. செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தினுடைய இணையதளத்தில் இருக்கக்கூடிய தகவல்களின்படி பார்த்தால், 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு, செம்மொழி விருதுகள் பெற்றவர்களுடைய பட்டியல்கள் இதுவரையில் இடம் பெறவில்லை என்பது வேதனைக்குரிய ஒன்று. 2015-2016 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைகூட வெளியிடப்பட்டதாக அதில் தெரிவிக்கப்படவில்லை.

திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தோடு செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தை இணைக்க முயற்சி நடந்தபோது உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் அந்த முடிவிற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், மத்திய அரசு உடனடியாக அந்த முடிவை திரும்பப் பெற்றுக் கொண்டது. அதனால், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தை முற்றிலும் செயலிழக்க வைத்து, நம்முடைய தாய்மொழியாம் தமிழை அவமானப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளிலே இன்றைக்கு மத்தியில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் பா.ஜ.க. அரசு ஈடுபட்டிருக்கிறது என்பது வேதனைக்குரிய ஒன்று. செம்மொழி

2019 பிப்ரவரி 14] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்குத் தலைவராகப் பொறுப்பு வகிக்கக்கூடியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுதொடர்பாக மத்திய அரசுக்கு உடனடியாக அழுத்தம் கொடுத்து, செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் முழுவீச்சில் இயங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றிகூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-35

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும், 2006-ல் கருத்துரு பெறப்பட்டு, முதல் மூன்று வருடங்கள் இந்த நிறுவனம் மைசூரில் இருக்கக்கூடிய* Central Classical Institute-*லிருந்து இயங்கிக்கொண்டிருந்தது. அதற்குப் பிறகு, தரமணியிலே நமது தமிழக அரசாங்கத்தின் உதவியுடன், ஆனால் மத்திய அரசாங்கத்தின் ஆளுகையில் நடந்துகொண்டிருக்கிறது.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய முதல் கருத்து இதற்குக் கொடுக்கிற funding *குறைந்துகொண்டே வந்திருக்கிறது என்பது. அதன் உண்மை நிலையை உங்கள் முன்னால் எடுத்துவைக்க விரும்புகிறேன். இந்த நிறுவனம் துவங்கப்பட்டு, முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த 2006-லிருந்து 2011 வரைக்கும் உள்ள ஐந்து வருடங்களிலே, முதல் மூன்று வருடங்களில் பெறப்பட்ட நிதி 2.8 கோடி ரூபாய், 4.01 கோடி ரூபாய், 3.00 கோடி ரூபாய் அளவுதான். முதலில் சராசரியாக ஒரு வருடத்திற்கு 3 கோடி ரூபாய் கிடைத்துக் கொண்டிருந்தது. அடுத்த இரண்டு வருடங்களிலே, 2009-2010, 2010-2011-ல் இணைந்து 19.48 கோடி ரூபாய் பெறப்பட்டது. அதாவது, சராசரியாக ஒரு வருடத்திற்கு 6.16 கோடி பணம் நமக்கு வந்திருக்கிறது. அந்த நேரத்திலே எண்பேராயம், ஐம்பெருங்குழு ஆகிய இரண்டு கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டு, மைசூரிலிருந்து இங்கு பணிக்கு வந்தவர்கள். சுமார் 41 பேர் இருந்தார்கள். கடந்த 8 வருடங்களில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட 2011-லிருந்து இன்று வரை* sanction *செய்யப்பட்ட* budget *தொகை சுமார் ரூபாய் 73 கோடியே*

[திரு. க. பாண்டியராஜன்] [2019 பிப்ரவரி 14

38 இலட்சத்து 43 ஆயிரத்து 637 ஆகும். சராசரியாக ஒரு வருடத்திற்கு 9.17 கோடி ரூபாய் sanction செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, தி.மு.க. ஆட்சியில், வருடத்திற்கு 6.16 கோடி ரூபாய் அவர்கள் sanction செய்த தொகை என்றால், நமது ஆட்சியில் sanction செய்யப்பட்ட தொகை 50 சதவிகிதம் அதிகம். அதாவது, ஓராண்டுக்கு 9.17 கோடி ரூபாயை நாம் பெற்றிருக்கிறோம். இந்த வருடம், இதுவரைக்கும் 2.35 கோடி ரூபாய் வந்திருக்கிறது. இன்னும் 8 கோடி ரூபாய் வர வேண்டியிருக்கிறது. அந்தப் பணம் வரும்பொழுது, பெரும்பாக்கத்தில் இன்றைக்கு மிகப் பெரிய வளாகமாக, தமிழ் வளாகமாக உருவெடுத்து வரக்கூடிய அந்த செம்மொழி நிறுவனத்திற்கான அலுவலகம், வெகு விரைவில், அடுத்த மூன்று மாதங்களிலே கட்டப்பட்டு, அந்த இடத்திலே உன்னதமான ஒரு வளாகம் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, 2017 ஜூலை மாதம் திருவாரூர் பல்கலைக்கழகத்தோடு, செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தை இணைக்கக்கூடிய ஒரு கருத்துரு வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி, அதை உறுதியாக எதிர்த்து நின்று, அதை திருவாரூர் பல்கலைக்கழகத்தோடு இணைக்காமல், தனது தனித்தன்மையுடன் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று குரல் கொடுத்தார். அந்தக் குரலின் விளைவாகத்தான் அது இன்றைக்குத் தனி நிறுவனமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. இன்றும் அந்த நிறுவனத்தில் 40 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்பதற்காக, போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சொன்ன ஒரு விஷயம் சரிதான். இதுவரைக்கும் பொறுப்பு Director-தான் பணியிலிருக்கிறார். இதுவரைக்கும் அங்கு நிரந்தரமான ஒரு Director நியமிக்கப்படவில்லை. அதற்காக விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. Thiru. S.K. Prabhakar, I.A.S., அவர்களது தலைமையிலே ஒரு Search Committee போடப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் நிரந்தர இயக்குநர் நியமிக்கப்படுவார் என்று அந்த நிறுவனம் சார்பாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதனால் எந்தப் பணியும் அங்கு தடைபடவில்லை.

2019 பிப்ரவரி 14] [திரு. க. பாண்டியராஜன்]

குறிப்பாக, கடந்த 2 ஆண்டுகளிலே மணிப்பூரி, குஜராத்தி, பஞ்சாபி, தெலுங்கு, கன்னடம் ஆகிய 5 மொழிகளில் திருக்குறளை மிக வித்தியாசமான முறையில் மொழிபெயர்த்து, உலகத் தமிழர்களுக்கு அதைக் கொண்டுபோய் சேர்க்கும் பணியை அவர்கள் செய்திருக்கிறார்கள். 2014-லிருந்து 2019 வரைக்கும் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்பட்டு பல பல்கலைக்கழகங்களுக்கு உதவித் தொகைகளும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்நிறுவனம் முக்கியமான ஒரு கருவூலமாக, முக்கியமாக தமிழ் சார்ந்த பணிகளுக்கு support *கொடுக்கிற ஒரு கருவூலமாக* emerge *ஆகியிருக்கிறது. அதேபோன்று, சங்க இலக்கியக் குறுந்திட்டங்களில் 19 திட்டங்களை சிறிய, சிறிய* projects *ஆக எடுத்து செய்துகொண்டிருக்கிறார்கள். விருதுகளைப் பொறுத்தவரைக்கும், 2017 வரைக்கும் அனைத்து விருதுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன; கலைஞர் விருது தவிர. அதை இல்லை என்று சொல்லவில்லை. நீங்கள் சொன்னது சரிதான். அந்த ஒரு விருது மட்டும் வழங்கப்படவில்லை. அது மத்திய அரசாங்கத்தினுடைய முடிவு.* (குறுக்கீடு) *தயவுசெய்து இங்கே பாருங்கள், இந்த நிறுவனத்திற்கு முதல்வர் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். ஆனால், இது மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனம். மத்திய அரசாங்கத்தை அந்த விருதைக் கொடுக்கவைப்பதற்கும் நாங்கள் முயற்சி எடுக்கப்போகிறோம்.*

முற்பகல் 11-40

தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனங்களால் வழங்கப்படும் விருதுகளைத் தவிர இந்த 8 வருடங்களில் தமிழுக்காக நமது தமிழக அரசாங்கம் கொடுத்திருக்கிற விருதுகள் 65 என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வேறு எந்த மொழிக்கும் இந்தியத் திருநாட்டில் 65 விருதுகள் தரப்படுவது இல்லை. அந்த 65 விருதுகளில் 60 விருதுகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் உருவாக்கப்பட்டவை. (மேசையைத் தட்டும் ஒலி) *சென்ற வருடம் அயோத்திதாச பண்டிதர் பெயரில் விருது உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முந்தைய வருடம் சிங்காரவேலர் பெயரில் விருது உருவாக்கப்பட்டிருக்கிறது. அனைத்து விருதுகளும் முறையாகத் தரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடனும், தமிழ்ப் பல்கலைக்கழகத்துடனும், செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தினை இணைந்து செயல்பட வைக்க முயற்சிகளை*

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. க. பாண்டியராஜன்] [2019 பிப்ரவரி 14

எடுத்துக்கொண்டிருக்கிறோம். நல்ல funding இந்த நிறுவனத்திற்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றது. நிலையான ஒரு கட்டமைப்பு பெரும்பாக்கத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தில் இருக்கக்கூடிய ஆய்வாளர்களை நிரந்தரப்படுத்துவது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கின்றது. இது செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் ஆய்வில் இருக்கின்றது. இந்த முடிவுகள் அனைத்தும் மத்திய அரசு எடுக்கின்ற முடிவுகள்தான். தற்போது ரூ.50 கோடிக்கு proposal கொடுத்துள்ளோம். சென்ற பட்ஜெட் உரையில், 26 நாடுகளில் தமிழ் வள மையங்களை உருவாக்குவதற்கும், தமிழ்நாட்டில் அல்லாமல் இந்தியாவில் இருக்கின்ற 10 மாநிலங்களில் உருவாக்குவதற்காகவும், ரூ.50 கோடிக்கு அவர்களிடத்தில் உதவி கேட்டு proposal கொடுத்திருக்கிறோம். எல்லாவற்றையுமே project based ஆகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதனால்தான் இந்த மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு கண்டிப்பாக ரூ.50 கோடியை மத்திய அரசிடமிருந்து பெறமுடியும் என்ற நம்பிக்கையில் நாங்கள் இருக்கிறோம். செம்மொழி தமிழாய்வு நிறுவனம், தமிழக அரசாங்கத்தின் அனைத்து உதவிகளையும் பெறக்கூடிய ஒரு மத்திய அரசாங்கத்தின் நிறுவனம். அது எந்தவிதத்திலும் அழிந்துகொண்டிருக்கிறது என்றோ, இறந்துகொண்டிருக்கின்றது என்றோ கருத்தை பதிய வைக்க வேண்டாம். இது தழைத்தெழுந்து மிக உன்னதமான நிலைக்கு, எப்படி உலகத் தமிழ்ச் சங்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், தமிழ்ப் பல்கலைக்கழகமும், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினால் மீட்டெடுக்கப்பட்டு, அவற்றின் தனித்தன்மை மாறாமல் மீட்டெடுக்கப்பட்டதோ அதுபோல செம்மொழி தமிழாய்வு நிறுவனமும், மீண்டும் தழைத்தோங்கி விளங்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் உறுதி கூறுகிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

(ஆ) தமிழ்நாடு வனச் சட்டம், 1882, பிரிவு 16(ஏ), நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், வருகிறேன். (குறுக்கீடு) நான் எடுக்கிறேன். இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். கூப்பிடுவதற்குள் ஏன் கேட்கிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.